பத்திரிக்கைச் செய்தி வெளியீடு

30.06.2026

வருமானத்திற்கு அதிகமாக சொத்து குவிப்பு வழக்கு - மாநகராட்சி ஆணையருக்கு 3 ஆண்டுகள் சிறை மற்றும் அபராதம் விதித்து தீர்ப்பு

சேலம் மாநகராட்சி ஆணையராக பணியாற்றிய திரு.வி.பிச்சை, என்பவருக்கு எதிராக வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை பிரிவால் தொடரப்பட்ட வழக்காகும். இவ்வழக்கில் திரு.வி.பிச்சை அவர்கள் கடந்த 01.01.1997 முதல் 31.12.2001 வரையிலான காலகட்டத்தில் வருமானத்திற்கு அதிகமாக ரூ.34,22,653/- (152.45 சதவீதம்) சொத்துக்கள் மற்றும் பண ஆதாயங்களை அவர் சேர்த்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து அவர் மேல் வழக்கு பதிவு செய்யப்பட்டு சிறப்பு நீதிமன்றம், சென்னையில் வழக்கு நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் 23 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு குற்றபத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. **இவ்வழக்கில் இன்று 30.06.2026ந்-தேதி திரு.வி.பிச்சை, முன்னாள் சேலம் மாநகராட்சி ஆணையருக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் மற்றும் ரூ.5,000/- அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.**